சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 18.08.2025.

SC.No.31/2023

PW 1 (மறு அழைப்பு) : சுஜாதா (வயது 49 ) க/பெ.சிவகுமார்

(1,2 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )

(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

Crlmp.No.8/2024 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் சாட்சி மீண்டும் அழைத்து கு.வி சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

**<u>1,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் சுமார் 15 நிமிடங்கள் நடந்திருக்குமா என்றால் ஆமாம். எனது கணவருக்கு யார் தகவல் சொன்னது என்றால் நான் தான் போன் செய்து சொன்னேன். புகாரில் உள்ள விவரங்கள் அனைத்தையும் நான் சொல்லி தான் எழுதினார்கள். போலிசார் எப்போது வீட்டிற்கு வந்தார்கள் என்றால் இரவு 9.30 முதல் 10 மணிக்குள் வந்தார்கள். புகாரிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சம்பவம்இரவு 7.30 நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சமயபுரம் காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் ஆமாம். 1,2 எதிரிகளின் பெயர்களை போலிசார் சொன்னதன்பேரில் தெரியும் என்றால் சரிதான். 1,2 எதிரிகளை முதன்முதலில் நீதிமன்றத்தில் தான்அடையாளம் காட்டினேனா என்றால் ஆமாம். நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் புகார் கொடுக்கவில்லை என்றும், காயின் பாக்ஸ் மூலம் தொலைபேசியில் போலிசாருக்கு தகவல் சொல்லவில்லை என்றும் கூறினால் சரியல்ல. 1,2 எதிரிகள் புகாரில் சொல்லியுள்ளவாறு குற்ற செயல்கள் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை கத்தியால் தாக்கவில்லை என்றால் சரியல்ல லைட்டாக இடது கழுத்தில் தாக்கினார்கள். போலிசார் சொல்லி கொடுத்ததன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பு மறு விசாரணை**

எதிரிகளை நான் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டுவதற்கு முன்பு வேறு எங்காவது பார்த்தேனா என்றால் இல்லை என்று கூறிவிட்டு பின்னிட்டு சமயபுரம் காவல் நிலையத்தில் பார்த்ததாக கூறுகிறார்.

**மறு கு.வி**

அரசு தரப்பில் கேட்டதால் சமயபுரம் காவல் நிலையத்தில் எதிரிகளை பார்த்தாக தற்போது பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல.

/signed/
சுஜாதா

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

/signed/
சார்பு நீதிபதி
இலால்குடி

சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 18.08.2025.
SC.No.31/2023
PW 2 (மறு அழைப்பு) : சிவகுமார் (வயது 55 ) த/பெ.தியாகராஜன்
(1,2 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)
Crlmp.No.8/2024 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் சாட்சி மீண்டும் அழைத்து கு.வி சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

**<u>1,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சம்பவம் பற்றி யார் தகவல் கொடுத்தது என்றால் எனது மனைவி போன் மூலம் தகவல் சொன்னார். எத்தனை மணிக்கு தகவல் சொன்னார் என்றால் இரவு 8.30 மணி இருக்கும். நான் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தேன் என்றால் கால் மணி நேரத்தில் வீட்டிற்கு வந்துவிட்டேன். போலிசார் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார்கள் என்றால் நான் போய் 10 நிமிடத்தில் போலிசார் வந்தார்கள். அ.சா.1 எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/signed/
சிவகுமார்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

/signed/
சார்பு நீதிபதி
இலால்குடி